நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்

ஏ.ஜெட்டிஅள்ளி ஊராட்சி,

# கட்டிட உரிம ஆணை

நாள் : 01.02.17

1994.ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவுகளின் கீழ், நிலங்களை ஒப்புதல் செய்தாலும், குடிசை அல்லாத கட்டிடம் கட்டுதல் அல்லது புதுப்பித்துக் கட்டுதல் போன்றவைகளுக்கும் அல்லது திருத்தப்பட்ட பிரிவுகளின் கீழ் குடிசை கட்டுதல், புதுப்பித்துக் கட்டுதல் போன்றவைகளுக்கும் மற்றும் நகரமைப்புத் திட்ட நிலப்பகுதிகளில் கட்டும் கட்டிடங்களுக்கும் சட்டப்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட உரிம ஆணை :-

பார்வை :- விண்ணப்பதாரர் திரு / திருமதி. செயற்பொறியாளர், த.நி.வ.வாரியம், ஓசூர் வீட்டுவசதிப் - ~~கோட்ட~~. பிரிவு, பாகலூர் சாலை, ஓசூர் அவர்களின் விண்ணப்ப மனு நாள் : ..................

| | | |
|---|---|---|
| அ | கட்டக்கோரும் கட்டிடத்தின் இருப்பிட முகவரி | காமராஜர்நகர் [ஏ.ஜெட்டிஅள்ளி புறநகர் குடியிருப்பு பகுதி] |
| ஆ | பகுதி (Ward) எண் | 1 |
| இ | நில அளவை (Survey) எண் | 463, 471, 472, etc. |
| ஈ | ஊராட்சித் தலைவர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்தின் தன்மை | தார்சு வீடு / ~~ஓட்டு வீடு~~ / ~~கூரை வீடு~~ |
| | அங்கீகரித்த ஊராட்சி தீர்மான எண் | 03 நாள் : 24.11.2017 |

## அங்கீகரிக்கப்படும் கட்டிடத்தின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | தரை பரப்பு LIG வகை வீடுகள் | 43.90 சதுரமீட்டர் x 30 வீடுகள் |
| 2 | முதலாவது மாடி பரப்பு | |
| 3 | இரண்டாவது மாடி பரப்பு | |
| 4 | எல்லைச்சுவர் / சுற்றுச்சுவரின் நீளம் | |
| 5 | கிணறு | |
| 6 | குளிக்கும் அறை | |
| 7 | மல அறை | |
| 8 | சாக்கடையின் நீளம் | |
| 9 | மெத்தைப் படி | |
| 10 | தூய மல அறை | |
| 11 | இதர வேலைகள் | |
| | மொத்தம் .... | 43.90 சதுரமீட்டர் x 30 வீடுகள் |

உரிமம் :- உரிம ஆணைக்கட்டணம் ரூ. 41940/- இரசீது எண். ............... நாள் : 01.12.2017

உரிம ஆணையின் காலவரை 01.12.2017 முதல் 30.11.2018 வரை (ஓராண்டு)

குறிப்பு :- கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் மேற்குறிப்பிட்டுள்ள நிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள அளவுகளில் கட்டிடம் கட்ட உரிம ஆணை வழங்கப்படுகிறது. அப்படி அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு முரனான மாறுபாடுகளுடன் கட்டினால் உரிம ஆணை பெற்றவரின் மீது அல்லது கட்டிய வீட்டிற்கு சொந்தமானவரின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறிவிக்கப்படுகிறது.

Scanned by CamScanner

1. அ. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு முரணாக கட்டிடம் கட்டக் கூடாது என எச்சரிக்கப்படுகிறது.

ஆ. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு முரணாகவோ அல்லது மாறுபாடு அடையவோ கட்டிடத்தை மாற்றிக்கட்ட மனுதாரர் விரும்பினால் போதிய காலம் முன்னதாக மனு தாக்கல் செய்து புதிய அனுமதிப்பெற்ற பிறகு கட்டிடம் கட்டிக்கொள்ளலாமே தவிர, மற்றப்படி மாற்றி கட்டக் கூடாது.

இ. மேற்குறிப்பிட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு முரணாக மாற்றியோ அல்லது வேறு எவ்விதமாகவோ புதிய அனுமதிபெறாமல் கட்ட துவங்கினால் மேற்படி செய்த தவறுதலுக்காக மேற்படியார் மீது வழக்கு தொடருவதுடன் கட்டிடம் இடிக்கப்படும்.

2. அ. உரிம ஆணையின் காலவரை முடிந்துவிட்டால் மேற்கொண்டு எந்த ஒரு கட்டிடமும் கட்டக்கூடாது. அப்படி கட்டிடம் முடிவு பெறாமல் இருந்தால், ஊராட்சி தலைவருக்கு மேற்கொண்டு காலவரை கொடுக்கும்படி மனுத்தாக்கல் செய்து அனுமதிபெற்ற பிறகே, மேற்கொண்டு கட்டிட வேலையை துவக்கவேண்டும்.

ஆ. அவ்வாறு புதுப்பிக்க தேவைப்பட்டால் சொந்தக்காரர் அல்லது உரிம ஆணை பெற்றவர் அனுமதிக்கப்பட்ட காலவரைக்கு குறைந்தபட்சம் ஒருமாத காலத்திற்கு முன்னதாக ஊராட்சி தலைவருக்கு மனுதாக்கல் செய்து புதிய உரிம ஆணை பெறவேண்டும்.

இ. உரிமையாணையின் காலவரை முடிந்தபின் மேற்குறிப்பிட்ட நிபந்தனை எண்.2(ஆ)–வில் குறிப்பிட்டபடி அனுமதி பெறாமல் எந்த நேரத்திலாவது சொந்தக்காரர் அல்லது உரிம ஆணை பெற்றவர் கட்டிட வேலையை செய்தால், அவர்மீது வழக்கு மன்றத்தில் வழக்கு தொடர்வது மட்டும் இல்லாமல் கட்டிடமும் அப்புறப்படுத்தப்படும்.

3. 1994.ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் அடங்கியுள்ள எந்த பிரிவுக்கும் முரணாகவும், அவ்வப்போது ஏற்படுத்தப்படும் துணை விதிகளுக்கு முரணாகவும் கட்டிடங்கள் கட்டக்கூடாது.

4. தமிழ்நாடு நகரமைப்பு சட்டத்தின் கீழ், நகரமைப்புத் திட்ட விதிகளுக்கு முரணாகவும், மேற்குறிப்பிட்ட சட்டத்தின் அவ்வப்போது அறிவிக்கப்படும் சட்டங்களுக்கு முரணாகவும் கட்டிடங்கள் கட்டக்கூடாது.

5. தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டத்தின் கீழும் மற்றும் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் சட்டங்களின் துணை விதிகளுக்கும் முரணாக ஏதாவது கட்டிடம் கட்டினால், கட்டிடம் கட்ட வழங்கப்பட்ட உரிம ஆணையினை ரத்து செய்யவும், நிறுத்தி வைக்வும் ஊராட்சி தலைவருக்கு அதிகாரம் உண்டு.

6. ஊராட்சி தலைவர் அல்லது ஊராட்சி தலைவரின் அதிகாரம் பெற்றவர் கட்டப்பட்டுவரும் கட்டிடத்தை பார்வையிட எந்த நேரத்திலாவது வந்தால், அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தையும், உரிம ஆணையையும், அவர்களின் பார்வைக்கு கொடுக்க எந்த நெரத்திலும் கட்டிடம் கட்டும் இடத்தில், கட்டிட உரிமையாளர் வைத்திருக்கவேண்டும்.

தனி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஏ.ஜெட்டிஅள்ளி ஊராட்சி
ஊராட்சி ஒன்றியம் நல்லம்பள்ளி

01/12/2017

..நர் :
..ரு செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்
/ பெ. தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியம்
ஓசூர் குடிசைப்பகுதி பிரிவு (கிராமம்),
பாகலூர் ரோடு ஓசூர் (அஞ்சல்),

Scanned by CamScanner